ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2469/08 - 2025 දෙසැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා - 2025.12.30
*2469/08 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**கௌரவ சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களினால்**

முத்திரை

**அநுர குமார திசாநாயக்க.**

1. **சட்டத்தரணி பியசேன ரணசிங்ஹ அவர்கள்**
   **முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி**
2. **திரு. ஈ.ஆர்.எம்.எஸ்.எச். ஏக்கநாயக்க அவர்கள்**
   **இலங்கை கணக்காளர் சேவை - தரம் I**
3. **திரு. டி.எஸ். விக்கிரமசிங்ஹ அவர்கள்**
   **முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்**

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!

கடந்த பல தசாப்தங்களாக கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணி, கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பிலும் நகர சபை மூலம் மேற்கொள்ளப்படும் விநியோகம், சேவைகள், கருத்திட்டங்கள் மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல், மோசடி, சொத்துக்களின் குற்றவியல் ரீதியான கையாடல், நம்பிக்கைப் பொறுப்பின் குற்றவியல் ரீதியான மீறுகை, ஏமாற்றுதல் மற்றும் அதிகாரத்தை அல்லது அரச வளங்களையும் சலுகைகளையும் துஷ்பிரயோகம் செய்தல் ஆகிய பிழையான நடவடிக்கைகள் தொடர்பில் அரசியல் பதவிகளை வகித்தவர்கள் அல்லது தொடர்ந்து வகித்துக் கொண்டிருப்பவர்களுமான நபர்களினதும் அரசாங்க சேவையாளர்களாக அத்துடன் நியதிச் சட்டமுறை சபைகளின் உத்தியோகத்தர்களாக சேவையில் இருந்தவர்களினதும் அல்லது தொடர்ந்து இருப்பவர்களுமான நபர்களுக்கு மற்றும் சேவை மற்றும் விநியோகம் மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாலும்,

1A - PG 7440 — 358 (2025/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலே இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளின் விளைவாக அரசாங்க சொத்துக்களுக்கும் வருமானத்திற்கும் பாரதூரமான நட்டம் அல்லது சேதம் விளைவிக்கப்படல் மற்றும் கொழும்பு மாநகர சபை மூலம் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது போயுள்ளமையாலும்,

இந்த முறைப்பாட்டுக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதியாக ஆராயும் நோக்கில் குறித்த முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் மற்றும் தகவல்கள் தொடர்பில் புலனாய்வு மற்றும் விசாரணை செய்யும் தேவைப்பாடு காணப்படுவதனாலும்,

மேற்குறித்த செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் அல்லது நிறுவனங்கள் இருப்பின் அவர்களை இனங்காணும் தேவைப்பாடு உள்ளதனாலும்,

அத்தகைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிசெய்வதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதனை தீர்மானித்தல் தேசத்தின் நலனுக்கு அத்தியாவசியமானதொரு விடயமாக உள்ளதென நான் கருதுவதனாலும்,

மேலே சொல்லப்பட்ட பிழையான செயற்பாடுகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் புலனாய்வு செய்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென நான் கருதுவதனாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றிய மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு, திருத்தப்பட்ட (393 ஆம் அத்தியாயமான) 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட,

1. **சட்டத்தரணி பியசேன ரணசிங்ஹ அவர்கள்**
   **முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி**
2. **திரு. ஈ.ஆர்.எம்.எஸ்.எச். ஏக்கநாயக்க அவர்கள்**
   **இலங்கை கணக்காளர் சேவை – தரம் I**
3. **திரு. டி.எஸ். விக்கிரமசிங்ஹ அவர்கள்**
   **முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்**

ஆகிய உங்கள் அனைவரையும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்று, புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொண்டு அறிக்கையிடுவதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. 2010 முதல் 2025 வரையான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல், மோசடி, சொத்துக்களின் குற்றவியல் ரீதியான கையாடல், நம்பிக்கைப் பொறுப்பின் குற்றவியல் ரீதியான மீறுகை, ஏமாற்றுதல் மற்றும் அதிகாரத்தை அல்லது அரச வளங்களையும் சலுகைகளையும் துஷ்பிரயோகம் செய்தல், சட்ட ரீதியற்ற ஆட்சேர்ப்புக்கள் மற்றும் நியமனங்கள், சட்டவிரோத திட்டங்கள், பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை மீறுதல், அசையும் அசையாச் சொத்துக்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கும் போது மேற்கொள்ளப்பட்டுள்ள முறைகேடுகள், உரிய நடைமுறை விதிகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள், சமரசம் ஏற்படுத்தல் மற்றும் தீர்த்து வைத்தல் மற்றும் குறித்த பிழையான நடவடிக்கைகள் மற்றும் குற்றச் செயல்களின் விளைவாக அரச சொத்துக்கள் மற்றும் அரச வருமானத்திற்கு பாரதூரமான நட்டம் அல்லது இழப்பு விளைவித்தல் தொடர்பில் அரசியல் பதவிகளை வகித்தவர்கள் அல்லது தொடர்ந்து வகித்துக் கொண்டிருப்பவர்களுமான நபர்களினதும் அரசாங்க சேவையாளர்களாக அத்துடன் நியதிச் சட்டமுறை சபைகளின் உத்தியோகத்தர்களாக சேவையில் இருந்தவர்களினதும் அல்லது தொடர்ந்து இருப்பவர்களுமான நபர்களுக்கு மற்றும் சேவை மற்றும் விநியோகம் மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் பற்றிய பொதுமக்கள் முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்களை கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளல். இப்பணிகளை முன்னெடுக்கும்போது மேற்குறித்த காலப்பிரிவில் உள்ளடங்காத அல்லது மேற்குறித்த செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக காணப்பட்டாலும் பாரதூரமான தன்மையுடையதென விசாரணை ஆணைக்குழு கருதும் பிழையான செயற்பாடு அல்லது குற்றம் தொடர்பில் பொதுமக்களது முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்களைக் கோருதலும் பெற்றுக்கொள்ளலும்;

2. மேற்சொல்லப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முறைப்பாடுகள், தகவல்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடியானதும் பக்கச்சார்பற்றவைகளுமான விரிவான ஆய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளல்;

3. அத்தகைய தவறுகள், குற்றச்செயல்கள் மற்றும் அதிகாரம் அல்லது தத்துவம், அரச வளங்கள் மற்றும் சலுகைகளை முறைகேடாக பயன்படுத்தல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் அல்லது நிறுவனங்களை இனங்காணுதல்;

4. மேற்சொல்லப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய தவறுகள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் மற்றும் அத்தகைய சம்பவங்கள் மற்றும் தவறான செயற்பாடுகள் தொடர்பான குற்றங்களைப் புரிந்தமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக பெற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை இனங்காணுதல் மற்றும் சேகரித்தல்;

5. மேலே உள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் சுற்றெல்லைக்குள் எந்த நிகழ்வுகள் வருகின்றன என்பதைக் கண்டறிந்து மேற்கூறிய தவறுகளைப் புரிந்ததாகக் கூறப்படும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் தேவையான ஆய்வுகளையும் விசாரணைகளையும் நடாத்துவதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசாருக்கு அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஏனைய அதிகாரசபைக்கு அல்லது நியதிச் சட்டமுறை அதிகார பீடத்திற்கு சமர்ப்பித்தல்;

6. மேற்சொல்லப்பட்ட தவறுகளைப் புரிந்ததாக கூறப்படும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக குற்றவியல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பில் கருத்திற் கொள்ளல் மற்றும் எதிராளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபருக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக புலனாய்வு மற்றும் விசாரணைக்கு அடிப்படையாக அமையும் விடயங்களை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்தல்;

7. தவறுகள் மற்றும் குற்றச்செயல்களை மேற்கொள்ளல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய ஏதேனும் நடவடிக்கைகள் இருப்பின் அது தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அத்தகைய தவறுகள் மற்றும் குற்றச் செயல்கள் எதிர்காலத்தில் நிகழ்வதனை தடுக்கும் நோக்கில் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை என்னிடம் சமர்ப்பித்தல்;

மேலும், மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தலைவராக **முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சட்டத்தரணி பியசேன ரணசிங்ஹ அவர்கள்** ஆகிய உங்களை நான் இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தங்களுக்கு தோற்றப்படக்கூடியவாறான தேவையான குற்றவியல் மற்றும் சட்டமருத்துவ ஆய்வுகளை நடத்துவதற்கு அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் அனைத்து பகிரங்கமான மற்றும்/ அல்லது அந்தரங்கமான புலனாய்வுகள் அல்லது விசாரணைகளை நடத்துவதற்கு மேற்சொல்லப்பட்ட ஆணையாளர்கள் ஆகிய உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, இவ்வதிகாரப் பத்திரத் திகதியிலிருந்து மூன்று (03) மாதங்களுக்குள் முதலாவது இடைக்கால அறிக்கையினையும் அதனைத் தொடர்ந்து மாதத்திற்கு (01 மாதம்) ஒரு முறை இடைக்கால அறிக்கைகளையும் இங்கு குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் தங்களது விசாரணைகள் மற்றும் புலனாய்வு முடிவுகள் மற்றும் அது தொடர்பான உங்களது பரிந்துரைகள் உள்ளடங்கிய இறுதி அறிக்கையினையும் உங்களது ஒப்பத்துடன் எனக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பான ஏதேனும் ஒரு விசாரணையின் ஒரு பகுதி பகிரங்கமாக நடத்தப்படலாகாது என உங்களது தற்றுணிபின்படி முடிவு செய்யப்படுமாயின் அப்பகுதி பகிரங்கமாக நடத்தப்படலாகாது என இத்தால் நான் உங்களுக்கு பணிப்பு விடுகின்றேன்.

மேலும் உங்களின் ஆய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் ஒத்துழைப்பு அல்லது தகவல் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள், நியதிச்சட்டமுறைச் சபைகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிற நபர்கள் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கோருவதுடன் பணிப்பும் விடுக்கின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 12-0264